## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.202/2012 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு. அபுபக்கர் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

3 எதிரிவது ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 வது எதரி ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of February 2024.

நான் மூலைக்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 யை எனது அக்கா ஆவார். வழக்கின் எதிரிகளை தெரியும். அ.சா.1 ன் ஊர்காரரர்கள். 17/03/2011 ஆம் தேதி எனது அக்காவான அ.சா.1 க்கு சொந்தமான கல்லத்தியில் உள்ள வயலுக்கு அவருடன் சென்றிருந்தேன். அப்போது மாலை 06.00 மணியளவில் எனது அக்காவிற்கு சொந்தமான வயலுக்கு செல்லும் வழியில் எதிரிகள் தோண்டி கொண்டிருந்தார்கள் எனது அக்கா அ.சா.1 ஏன் தோண்டுகிறீற்கள் என்று கேட்ட போது எதிரிகள் எனது அக்காவை சத்தம் போட்டு அசிங்மாக தேவடியா என்று பேசி கொண்டிருந்தார்கள்.

நான் சென்று கேட்ட போது ஆஜர் எதிரி குணா கம்பியை வைத்து என்னை இடது பக்க மூக்கு, இடது பக்க விலா பகுதி மற்றும் இடது கை மணிகட்டில் அடித்து காயம் ஏற்படுத்தினார். ஆஜர் எதிரி என் அக்கா அணிந்திருந்த பர்தாவை பிடித்து இழுத்தார் அப்போது நான் கேட்ட போது நீ கேட்டால் தலையை அறுத்துவிடுவேன் என்று மிரட்டினார். என்னை அடித்ததால் எனக்கு இரத்தம் அதிகமாக வந்து மூச்சு திணறல் ஏற்பட்டது அதனால் திருநெல்வேலி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன்

சிகிச்சையில் ஒரு வாரம் இருந்தேன்.

19/03/2011 ஆம் தேதி அ.சா.1 ஆன எனது அக்கா காவல்நிலையத்தில் புகார் அளித்தார் அது சம்பந்தமாக நான் சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்பவம் மாலை 06.00 மணிக்கு நடைபெற்றது. வழக்கு சம்பவம் ஒரு மணி நேரம் நடைபெற்றது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெறும் போது இருட்டி விட்டது என்றால் சம்பவம் நடக்கும் போது வெளிச்சம் இருந்தது. உங்களை குணா அடித்தாரா, மகேந்திரன் அடித்தாரா என்றால் குணா கம்பியால் மூக்கில் அடித்தார் மகேந்திரன் காலால் விலாவிலும், முதுகிலும் மிதித்தார். காலால் மிதித்த விபரத்தை போலிசாரிடம் சொன்னேன்.

எனக்கு விவசாயம் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெறும் போது அருகில் யாரும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் எதுவும் நடைபெறாததால் தான் சம்பவத்தின் போது யாரும் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உங்கள் அக்காவை அசிங்மாக ஏசினார்களா அடித்தார்களா என்றால் அசிங்கமாகவும் பேசினார்கள் அதன்பிறகு தள்ளியும் விட்டார்கள். அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டதா என்றால் சிகிச்சைக எடுக்கும் அளவு எந்த காயமும் இல்லை. மருத்துவமனைக்கு நான் சென்றேன் அ.சா.1 உடன் வந்தார்.

அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லும் போது இரவு சுமார் 08.00 மணி இருக்கும். மருத்துவமனை சென்றவுடன் உடனே சிகிச்சை அளித்தார்களா என்றால் முதலில் உடலில் உள்ள குறைபாடுகளை விசாரித்து பின்னர் சிகிச்சை அளித்தார்கள். மருத்துவமனையில் சுமார் 6 நாட்கள் இருந்தேன். அ.சா.1 என்னுடன் ஒரு நாள் மருத்துவமனையில் இருந்தார் பின்னர் மறுநாள் காவல்நிலையம் சென்று புகார் அளித்தார்.

புகார் மனு காவல்நிலையத்தில் வைத்து எழுதப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது அ.சா.1 க்கு தான் தெரியும். புகார் மனுவில் உள்ள விபரங்கள் பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் புகார் அளிக்கும் போன் நான் அவருடன் இல்லை. அ.சா.1 உடன் புகார் அளிக்க யார் சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 புகார் மனுவில் நீங்கள் மருத்துவமனையில் இருந்த விபரத்தை தெரிவித்துள்ளாரா என்றால் தெரிவித்திருப்பார்.

நீங்கள் வயல்காட்டிற்கு செல்லும் போது எதிரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்றால் வயல்காட்டிற்கு போக கூடாத அளவிற்கு 3 எதிரிகளும் தோண்டி வைத்திருந்தார்கள். கம்பி எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் அடித்தால் இரத்தம் வரும் அளவு இருக்கும். பாதை சம்பந்தமாக அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் உள்ளது என்றால் இதற்கு முன்பும் தோண்டி கொண்டிருப்பார் அது சம்பந்தமாக ஏற்கனவே

பிரச்சனை இருந்தது.

இதற்கு முன்பு எதரிகள் பிரச்சனை செய்த போது அ.சா.1 புகார் அளித்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அசா.1 க்கு தான் தெரியும். காயம்பட்ட நான் புகார் அளிக்காமல் அ.சா.1 பொய்யான விபரம் அளித்து புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் மூச்சுதிணறல் ஏற்பட்டு சிகிச்சையிலிருந்த போது என்னுடன் இருந்துவிட்டு மறுநாள் புகார் அளித்தார்.

சம்பவத்தன்றே போலிசார் என்னை சிகிச்சையில் இருக்கும் போது விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கையெழுத்து போட்டேனா என்று ஞாபகமில்லை ஆனால் வாக்குமூலம் அளித்தேன்.

நான் வாக்குமூலம் அளிக்கவில்லை அப்படி அளித்திருந்தால் வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. புகாரை நான் கொடுக்க சொன்னோ அல்லது அ.சா.1 தன்னிச்சயைாக அளித்தாரா என்றால் நான் தான் வழக்கு சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் தெரிவிக்க அறிவுறுத்தினேன்.

நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லையென்றும் அ.சா.1 எனது அக்கா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல சம்பவம் நடந்தது உண்மை. எனக்கு நீதிமன்றத்திற்கு ஆஜராக சம்மன் வழங்கப்பட்டது என்றால் சரிதான் இரண்டு மாதத்திற்கு முன் தான் வழங்கப்பட்டது. ஒரு வருடத்திற்கு சம்மன் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்பவம் உண்மை இல்லையென்பதால் தான் ஏற்கனவே பெறப்பட்ட அழைப்பாணையை பெயரில் நீதிமன்றத்திற்கு வரவில்லையென்றும் அ.சா.1 கேட்டு கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரியல்ல நான் வெளியூரில் வேலை செய்வதால் அழைப்பாணை கையில் கிடைக்கவில்லை தகவல் கிடைத்தவுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

எனக்கு ஏற்பட்ட காயம் தன்னிச்சயைாக கீழே விழுந்து ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>